செய்தி வெளியீடு: 700 நாள் 09.10.2009

# வணிகர்களுக்கு மின்னணு முறையில் வரிசெலுத்தும் வசதி அறிமுகம்

வணிகவரித்துறை வணிகர்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து வருகிறது. வணிகவரித்துறையை மின் ஆளுமை (e-governance) செய்யும் முயற்சியின் முதல் கட்டமாக நவம்பர் 2007 முதல் பெரும் வணிகர்கள் மற்றும் உள்ளீட்டு வரி வரவை (Input Tax Credit) பயன்படுத்தி வரிசெலுத்தும் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட வணிகர்கள் மின்னணு முறையில் (e-filing of returns) மாதாந்திர படிவங்களை தடையில்லாமல் எளிதில் தாக்கல் செய்து வருகின்றனர். மின்னணு பயன்பாட்டின் அடுத்த கட்டமாக மின்னணு மூலம் வணிகர்கள் வரிப்பணம் செலுத்தும் முறை (e-payment) அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் வணிகர்கள் சுலபமாகவும், எவ்விடத்தில் இருந்தும் வரிப்பணத்தை செலுத்தலாம். இதனால் வணிகவரி அலுவலகங்களுக்கு வணிகர்கள் நேரில் செல்லும் நேரம் மிச்சமாகும். இத்தகைய வசதியை அனைத்து வணிகர்களும் பயன்படுத்தலாம். மேலும், வணிகர்களில், முந்தைய ஆண்டில் ரூபாய் இருநூறு கோடி மற்றும் அதற்கு மேலும் வரிவிதிப்பிற்குரிய விற்பனை தொகை உள்ளவர்கள் கண்டிப்பாக மின்னணு முறையில் வரிப்பணம் செலுத்த ஆணையிடப்பட்டுள்ளனர். தற்போது, வணிகர்கள் மின்னணு முறையில் பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் வரிப்பணம் செலுத்த ஆவண செய்யப்பட்டுள்ளது. இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பரோடா வங்கி ஆகிய வங்கிகள் மூலமும் இந்த முறையில் பணம் செலுத்தப்படும். இது குறித்து மேலும் விவரங்கள் அறிய சம்பந்தப்பட்ட கோட்ட இணை ஆணையர்களை வணிகர்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது மேலும் விவரங்கள் அறிய இத்துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 4250 960 பயன்படுத்தலாம். வணிகவரித்துறையின் இணையதளம் www.tnvat.gov.in-ஐ தொடர்பு கொள்ளலாம். பாரத ஸ்டேட் வங்கியின் கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 112211 மற்றும் இணைய தள முகவரி www.onlinesbi,com-ஐ தொடர்பு கொள்ளலாம். வணிகவரித்துறை ஆணையர் இந்த வசதியை தவறாமல் வணிகர்கள் பயன்படுத்தி, பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு . இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9